OS No.497/2022

PW-1 –சரோஜினி

த/பெ.குப்புசாமி

நாள். 15.10. சா2025.

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.வழக்கு விவரங்களை படித்து பார்த்தேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்திருந்த பதிலையும் படித்துப் பார்த்தேன். பிரதிவாதிகளின் ஆவணங்களையும் பார்த்திருக்கிறேன். வாதிகளான சாந்தமணி, பழனிசாமி, வரதராஜ் மற்றும் பூங்கொடி என்னுடைய உடன் பிறந்தவர்கள் தான். சாந்தாமணி அவிநாசி ராக்கியாபாளையத்தில் இருக்கிறார். பூங்கொடி எஸ்.ஆர் நகர், மங்கலம் ரோடு, குமரன் காலேஜ் அருகில் இருக்கிறார். நான் பழனிசாமி மற்றும் வரதராஜ் ஆகியோர் ஒன்றாக எஸ்.ஏ.பி தியேட்டர் அருகில் கூடியிருக்கிறோம்.

2. நாங்கள் மூன்று பேரும் ஒரே குடும்பமாக தான் 105/63 மாரியம்மன் கோயில் வீதியில் கூடியிருக்கிறோம். எங்கள் வீட்டிற்கு எதிர்த்த ரோட்டை தாண்டி தான் பிரதிவாதிகள் எங்களுக்கு எதிரே குடி இருக்கிறார்கள். பிரதிவாதிகள் 99 மாரியம்மன் கோயில் வீதி என்பதுதான் முகவரி என்று சொன்னால் சரிதான். மொத்தமே ஏழு பிரதிவாதிகளும் ஒரே முகவரியில் தான் கூடியிருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரிதான். ஒரே கதவு எண் என்ற போதிலும் அடுத்தடுத்து குடியிருந்து வருகிறார்கள். தாவா சொத்து விவரத்தில் இருக்கும் சங்கதி எனக்கு சொந்தமானது என்றும் அதில் பிரதிவாதிகள் வந்து என்னை இடையூறு செய்யக்கூடாது என்று சொல்லி தான் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம்.

3. அதாவது தாவோசொத்தானது நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு எதிரே இருக்கும் ரோட்டை ஒட்டினார் போல் இருக்கும் இடம் தான், தாவா சொத்து ரோடு தென் வடல் ரோட்டிற்கு கிழப்புரம் இந்த தாவா சொத்து இருப்பதாகத்தான் நான் வழக்காடுகிறேன். தாவா சொத்து எங்களுடையது என்பதை நிரூபிக்கவும் என்னுடைய சுவாதீனத்தில் இருக்கிறது என்பதை நிரூபிக்கவும் நான் ஆவணம்

ஏதும் தாக்கல் செய்திருக்கிறேன் என்று கேட்டால் தாவாவில் பட்டா, சிட்டா மற்றும் டி.எஸ்.எல்.ஆர் ஆகியவை ஆவணப்படுத்தி இருக்கிறேன்.

4. 15.10.1968 இல் பாப்பம்மாள் பெயரில் ஒரு பட்டா கொடுத்திருப்பதாக நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் சொத்து விவரத்தில் சொத்து அமைந்துள்ள இடத்திற்கு நான்கு எல்லைகள் குறிப்பிட்டு செக்கு பந்தியாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் என்னுடைய சொத்து விவரத்தில் வீடு இருந்ததாகவோ அல்லது வீட்டின் அளவுகள் எதுவும் குறிப்பிட்ட சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஓட்டு வீடு இருக்கிறது ஆனால் சிதந்த நிலையில் இருக்கிறது அந்த வீட்டிற்கு கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி, அதற்கு மின் இணைப்பு எண் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

5. அந்த வீட்டில் நான் குடியிருக்க வில்லை என்று சொன்னால் என் அம்மா அங்கு தான் இருந்தார். அவர் இறந்து போகும் வரை அங்கு தான் இருந்தார். என் அம்மா 31.08.2010 ஆம் ஆண்டு இறந்து போனார் என்றால் ஆமாம். இறப்பு என்பது வசித்த முறை முகவரி என்று என் அம்மாவின் இறப்பு சான்றிதழில் 105/63 என்று எங்கள் வீட்டு முகவரிதான் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அதில் அப்படித்தான் இருக்கிறது அவர் இறப்பதற்கு இரண்டு ஒரு நாட்களுக்கு முன்பு எங்கள் வீட்டிற்கு தூக்கி வந்து விட்டோம் அதன் பின்பு எங்கள் வீட்டில் இறந்து போனார் அதனால் அப்படி இருக்கிறது.

6.அதே இறப்பு சான்றிதழில் என் அம்மாவின் நிலையான வீட்டு முகவரி என்ற காலத்தில் இதே முகவரியான 105 கீழ் 63 தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் சொன்னால் அந்த இறப்பு சான்றிதழில் அப்படித்தான் இருக்கிறது. என் அம்மா 105/63 என்ற முகவரியில் தான் குடியிருந்து வந்தார் என்றும் அதுதான் என் அம்மாவின் முகவரி என்றும் சொன்னால் சரியல்ல. நான் தான் இந்த வழக்குக்காக என் அம்மா தாவா சொத்தில் ரோட்டிற்கு எதிரே இருக்கும் ஓட்டு

வீட்டில் குடியிருந்து வந்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. 105 கீழ் 63 என்ற தாவா சொத்து கிரைய சொத்தா, பட்டா சொத்தா என்று கேட்டால் அது கிரைய சொத்து. அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்று கேட்டால் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். பதில் உரையில் ரோட்டிற்கு மேற்கே பாப்பா பெரிய இடத்தைப் பிடித்து வேறு பெயரில் அனுபவித்து வருவதாக சொல்லி இருந்த போதிலும் அதற்கு நாங்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.**வாசாஆ–5** ஆவணத்தில பாப்பம்மாளின் வாரிசு சான்றிதழிலும் முகவரி என்று 105 கீழ் 63 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஆமாம்.

8. தாவாசொத்திற்கு பல ஆண்டுகளாக வரி கட்டி வருகிறோம். ஆனால் நீதிமன்றத்தில் ஒரே ஒரு வரி ஆவணத்தை மட்டுமே ஆவணப்படுத்தி இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த **வாசாஆ–1** ,**வாசாஆ–2 மற்றும் வாசாஆ–3** காட்டப்படும் ஆவணத்தில் தாவா சொத்தானது காலியிடமாகத்தான் காட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஆமாம். ஆனால் அந்த வீடு இருக்கிறது அந்த வீட்டில் தான் என் அம்மா இருந்தார். நான் என்னுடைய சாட்சியத்திற்கு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. **வாசாஆ–1** ஆவணத்திற்கு தொடர்புடையவை தான் மற்ற இரண்டு ஆவணங்கள் என்றால் இருக்கலாம், ஆமாம்

9.**வா.சா.ஆ–1** ,**வா.சா.ஆ–2 மற்றும் வா.சா.ஆ–3** ஆகிய ஆவணங்கள் என் அம்மா 2010–த்தில் காலமானதற்கு பின்னிட்டு 2017–ல் பெறப்பட்ட ஆவணங்கள் தான் என்று சொன்னால் என்ன தேதி ஆவணத்தில் இருக்கிறதோ அதுதான். தாவா சொத்தின் விவரம் குறிப்பிடும்போது பழைய டி.எஸ் நம்பர்–42 என்றும் தற்போது டி.எஸ் நம்பர்–3 எண் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் வரை ரசீதில் டி.எஸ் நம்பர்–59 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு ஆமாம் என்று கூறுகிறார்.

10.தாவா சொத்துக்கான வரி ரசீது **வா.சா.ஆ–6** அல்ல என்றால் சரியல்ல.கடந்த 09.07.2021 அன்று மணி 01.37 நிமிடத்தில் செலுத்தப்பட்டதாக தான் வரி ரசீதில் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். வரி ரசீது சாந்தாமணி பெயரில் தான் போடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். **வா.சா.ஆ–6** ஆவணத்திற்கு முன்போ, பின்போ, எந்த வருடத்திற்கான வரி ரசீதும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம்.

11. நாங்கள் அதே 09.07.2021 தேதி என்று 1.35 மணிக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரே தடவையாக வரி கட்டியிருக்கிறோம் என்று சொன்னால் இல்லை. வழக்குக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களை தான் நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்ததற்கு ஆவணங்கள் எதுவும் வழக்கு சொத்து தொடர்பானது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 14.03.2021 இரண்டாம் பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட போலீஸ் பிரச்சனைக்காகத்தான் இந்த வழக்கை போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. புகார் கொடுக்கப்பட்டதெல்லாம் உண்மைதான்.

12. 23.08.2022 தேதியில் பிரதிவாதிகள் மீண்டும் தகராறு செய்ததாக நான் என்னுடைய வழக்கில் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்னுடைய சுவாதீனத்தை தடுக்க முயற்சித்தார்கள் என்றும் அது பொய்யான சங்கதி என்றும் சொன்னால் சரியல்ல. சுவாதீனத்தில் நான் இருக்கவே இல்லை என்றும் வழக்குக்காக நான் தான் சுவாதீனத்தில் இருப்பதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

13. பாப்பம்மாளுக்கு பட்டா கொடுத்தது உண்மைதான் என்றும் ஆனால் அந்த பட்டாவை பாப்பம்மாள் 1980 களிலேயே பிரதிவாதியின் முன்னோர்களுக்கு விற்று விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பெரியான் என்பவருடைய பட்டாபூமி தான் டி.எஸ் 43 என்று சொன்னால் ஆமாம். 1980 களில் பெரியானின் பட்டா பூமியும் பட்டா எல்லாம் பாப்பம்மாளின் பட்டா பூமியும் ஒரே இனமாக தான் இருந்தது என்றும் சொன்னால் சரிதான்.

14.1980–களில் பாப்பா பெரியானின் மனைவி மாரியம்மாளுக்கு ஒரு பதிவு செய்யாத கிரைய பத்திரத்தின் மூலமாக 1300 ரூபாய்க்கு அந்த பூமியை விற்று விட்டதாக சொல்லப்படுகிறது என்றால் அது தவறான தகவல். அதன் பின்பு மாரியம்மாள் தான் பூமியை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதனை ஒட்டி பாப்பம்மாள் தன்னுடைய அசல் பட்டாவை பிரதிவாதி வசம் ஒப்படைத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. பாப்பம்மாள் உயிருடன் இருக்கும் வரை இந்த சொத்திற்கு பாப்பம்மாள் வரவே இல்லை என்றும் பிரதிவாதியிடம் எந்த இடையூறும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மா இறந்து போனதற்கு பின்பு 2010 முதல் 2021 வரையிலும் நாங்களும் எந்த இடையூறும் பிரதிவாதியை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

16. அதன் பின்பு 2–ம் வாதிக்கும் 2–ம் பிரதிவாதிக்கும் இடையே 14.03.2021 தேதியில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாகத்தான் இந்த வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக போலியான ஆவணங்களை வைத்து தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் தாவா சொத்து விவரம் குறிப்பிட்ட எந்த விவரமும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் தான் சுவாதி இனத்தில் இருந்தோம் என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

17.தாவா சொத்து உரிய அசல் ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகள் வசம் இருக்கும் நிலையிலும் தாவாசொத்தின் சுவாதீனங்கள் பிரதிவாதிகள் வசம்தான் இருக்கிறது என்ற நிலையிலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பாப்பம்மாள் தன் சொத்தை ஏற்கனவே விற்றுவிட்டு மறு பயணம் பெற்றுவிட்ட நிலையில் பாப்பம்மாள் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து காலியிடம் என்று அனைத்து ஆவணங்களிலும் இருக்கும்போது அங்கு வீடு

இருப்பதாக மேலும் அந்த வீட்டில் பாப்பம்மாள் இருந்ததாக நான் சொல்வது பொய் சாட்சியம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.